**சுருக்கம்**

கைத்தறித் தொழில் – முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு 10,000 வீடுகள் கட்டுவதற்கு அனுமதி மற்றும் திட்ட வழிமுறைகள் – வீடு கட்டுவதற்கு முதற்கட்ட நிதி ஒப்பளிப்பு ரூ.92,00,00,000/– வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (டி2) துறை,**

அரசாணை (நிலை) எண்.231

நாள் 22.10.2013
விஜய, ஐப்பசி 5,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கவும்:

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி 110–இன் கீழ் 08.05.2013 அன்று அறிவிக்கப்பட்ட அறிக்கை.
2. கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.28524/2012/சி1, நாள் 30.8.2013.

---

**ஆணை:–**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 08.05.2013 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:–

> "மைய மற்றும் மாநில அரசுகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த தறிக் கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. தற்போது இத்திட்டம் நடைமுறையில் இல்லை. 22.04.2013 அன்று நடைபெற்ற கைத்தறி மற்றும் துணிநூல் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின்போது, 5 ஆண்டுகளில் கட்டப்படும் 3 லட்சம் பசுமை வீடுகள் மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்கென அதிகப்படியாக வீடுகளை கட்டித் தருவது குறித்து இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; விரைவில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்று நான் அறிவித்தேன். அதனைச் செயல்படுத்தும் வகையில், முதற்கட்டமாக, 2013–14–ஆம் நிதியாண்டில் 10,000 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் தமிழகம் முழுவதிலும் கட்டித் தரப்படும். முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 60,000 வீடுகளின்றி, கூடுதலாக நெசவாளர்களுக்கென 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

/த.பி.பா/

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நெசவாளர்களுக்கு 10000 பசுமை வீடுகள் கட்டும் திட்டம் தொடர்பாக 29.8.2013 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தினை தொடர்ந்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பின் அடிப்படையில் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் நெசவாளர்களுக்கென 10,000 பசுமை வீடுகள் கட்டுவதற்கும், ஒவ்வொரு வீடும் ரூ.2.60 இலட்சம் செலவில் (வீடு கட்டுமானப் பணிக்கு ரூ.2.30 இலட்சம், சூரிய மின்சக்தி விளக்குகளுக்கு ரூ.0.30 இலட்சம்) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தவும், நடப்பு நிதியாண்டில் (2013–2014) அதற்குரிய செலவினம் ரூ.260.00 கோடியை நிதி ஒதுக்கீடு செய்யவும் உரிய அரசாணை வழங்குமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிக்கையை செயல்படுத்தும் பொருட்டு, மேற்காணும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் பரிந்துரையை அரசு கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று பின்வரும் இனங்களின் மீது ஆணையிடுகிறது:–

I. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கான 10,000 பசுமை வீடுகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது;

II. இத்திட்டத்திற்கு ரூ.2.60 இலட்சம் அலகுத் தொகையில் வீடுகள் கட்டித்தர (ரூ.2.30 இலட்சம் கட்டுமானத்திற்காகவும், எஞ்சிய ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்கு) தேவைப்படும் தொகை ரூ.260,00,00,000/–ஐ (ரூபாய் இருநூற்று அறுபது கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

III. அ) மேலே பத்தி 3 (II)–இல் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையில் கட்டுமானத்திற்கு தேவைப்படும் தொகை ரூ.230,00,00,000/–ஐ கட்டுமான முன்னேற்ற அடிப்படையில் பின்வரும் விவரப்படி நான்கு கட்டங்களாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்கு ஒப்பளிப்பு செய்யப்படும்:–

| **தவணை** | **சதவீதம்** | **நிதி ஒப்பளிப்பு (ரூ.கோடியில்)** |
|---|---|---|
| முதல் தவணை | 40 | 92 |
| இரண்டாம் தவணை | 20 | 46 |
| மூன்றாம் தவணை | 20 | 46 |
| நான்காம் தவணை | 20 | 46 |
| **மொத்தம்** | **100** | **230** |

ஆ) சூரிய மின்சக்தி நிறுவுதல் தொடர்பாக தேவைப்படும் ரூ.30,00,00,000/–ஐ கட்டுமானம் நிறைவடையும் நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அளிக்கும் பிரேரணையின் அடிப்படையில் நான்கு கட்டங்களாக ஒப்பளிப்பு செய்யப்படும்.

…….3.

IV. மேலே பத்தி 3 (III)-இல் தெரிவிக்கப்பட்ட காலமுறையின் அடிப்படையில் 40 சதவீத முதல் தவணை தொகையான ரூ.92,00,00,000/–யினை (ரூபாய் தொண்ணூற்று இரண்டு கோடி மட்டும்) ஒப்பளிப்பு செய்து வழங்கப்படுகிறது.

V. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு தொடர்பாக, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 46, நாள் 17.08.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 98, நாள் 31.07.2013 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள பொதுவான வழிமுறைகள் மற்றும் இணைப்பில் தெரிவிக்கப்பட்ட வழிமுறைகள் ஆகியவற்றினைப் பின்பற்றி நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்;

VI தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் அமைக்கப்படும் சூரிய மின்சக்தி வசதி அமைப்பிற்கான நிறுவுதல் செலவினத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சேவை கட்டணமாக 4 விழுக்காடு, ரூ.1,20,00,000/–க்கு (ஒரு கோடியே இருபது இலட்சம் மட்டும்) மிகாமல் ஒப்பளிப்பு செய்து வழங்கப்படுகிறது.

VII மேலே பத்தி 3 (VI)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை தமிழ்நாடு எரிசக்தி முகமைக்கு சேவை கட்டணமாக வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

VIII இத்திட்டத்திற்கு தேவைப்படும் கூடுதல் பணியாளர்களான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையைச் சார்ந்த 20 மேற்பார்வையாளர்களுக்கு ஊதியம் வழங்க (ஒரு மேற்பார்வையாளருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.25,520/– வீதம்) தேவைப்படும் தொகை ரூ.61,24,800/– (ரூபாய் அறுபத்தியொரு இலட்சத்து இருபத்தினான்காயிரத்து எண்ணூறு மட்டும்) (ரூ.25,520 X20 X 12) திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்கு ஒப்பளிப்பு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது;

4. மேலே பத்தி 3 (II) மற்றும் பத்தி 3 (VI)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பின்வரும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | |
|---|---|
| " 4216 வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டுவசதி – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – JF – நெசவாளர்களுக்கான சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் – 16 பெரும்பணிகள்" (DPC 4216 03 789 JF 1607) | Rs.75,40,00,000/– |
| " 4216 வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டுவசதி – 796 பழங்குடியினர் பகுதித் துணை திட்டம் – JF – நெசவாளர்களுக்கான சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் – 16 பெரும்பணிகள்" (DPC 4216 03 796 JF 1602) | Rs. 2,60,00,000/– |
| " 4216 வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டுவசதி – 800 ஏனைய செலவு – JF – நெசவாளர்களுக்கான சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம் – 16 பெரும்பணிகள்" (DPC 4216 03 800 JF 1601) | Rs.182,00,00,000/- |
| மொத்தம் | **Rs.260,00,00,000/–** |

/த.பி.பா/

5. மேலே பத்தி 3 (VIII)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | |
|---|---|
| 2515 – 00 – ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்– 001 நெறிப்படுத்தலும் நிருவாகமும்– I திட்டத்தில் சேராதது – AT வட்டார தலைமை இடங்கள் – கிராம ஊராட்சிகள் – 01 சம்பளங்கள். (DPC 2515 00 001 AT 0102) | Rs.61,24,800/– |

6. இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு (பத்தி 4–இல் உள்ள) மதிப்பீட்டுக் கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இருப்பார். மேற்காணும் புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3 (IV), பத்தி 3 (VI) மற்றும் பத்தி 3 (VIII)-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது;

8. மேலே பத்தி 3(II) மற்றும் 3 (VI)–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி (New Service) குறித்த திட்டமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளுடன் நிதி (வரவு–செலவு பொது–1)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதித் (வரவு–செலவு பொது–1) / தொழில்கள்) துறைக்கு அனுப்புமாறும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை, நிதித் துறையின் அ.சா.எண்.60240/CMPC/2013, நாள் 21.10.2013 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண். 1719 (ஆயிரத்து எழுநூற்று பத்தொன்பது)–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:
கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை – 600 108.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
மாநில தலைமை கணக்காயர் (A&E), சென்னை– 600 018/( பெயரில்).
மாநில தலைமை கணக்காயர் (CA), சென்னை– 600 018 /( பெயரில்).
மாநில கணக்காயர் (CAS), சென்னை– 600 009.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை– 600 035 .

<u>நகல்:—</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மைச்செயலாளர், சென்னை— 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை— 600 009.
மாண்புமிகு அமைச்சர் (கைத்தறி மற்றும் துணிநூல்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை— 600 009.
நிதித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—600 009,
எரிசக்தித் துறை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—600 009.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, சென்னை.
நிதித் (ஊரக வளர்ச்சி / தொழில்கள் / வரவு செலவு பொது—1 மற்றும் பொது—II) துறை, சென்னை— 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை— 600 009.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் (எ1/பி1) துறை,சென்னை—9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 22.X.2013

/த.பி.பா/

## இணைப்பு

## முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் வழிகாட்டும் நெறிமுறைகள் (Guidelines)

**I.** பயனாளிகளின் தகுதிகள்:

1. கிராமப்புறங்களில் வசிக்க வேண்டும்.
2. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
3. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருப்பதுடன் இயங்கும் தறிகளை கொண்ட நெசவாளராக இருத்தல் வேண்டும்.
4. இதற்கு முன்னர் அரசு உதவியுடன் வேறு எந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழும் பயன் பெற்றிருக்க கூடாது.
5. நெசவாளர்கள் வசிக்கும் அதே கிராமப்புறத்தில் நெசவாளரின் பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தினரின் பெயரிலோ வீடு கட்டுவதற்கு தேவையான பட்டா நிலம் இருத்தல் வேண்டும். மேற்படி நிலப்பரப்பில் புதிதாக பசுமை வீடு கட்டப்படும் அல்லது ஏற்கனவே உள்ள சிதிலமடைந்த நிலையில் உள்ள வீட்டை இடித்து அப்புறப்படுத்தி பசுமை வீடுகள் கட்டும் திட்ட மாதிரியில் புதியதாக வீடுகள் கட்டப்படும்.
6. 10000 பயனாளிகளை சரக வாரியாக ஒதுக்கீடு செய்தல்

   பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ், சரக வாரியாக, கைத்தறி நெசவாளர்களின் மொத்தம் உள்ள எண்ணிக்கைக்கேற்ப, பயனாளிகளின் ஒதுக்கீடு கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரால் நிர்ணயம் செய்யப்படும்.

**II.** தகுதியுள்ள பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் குழு

- கிராமப் புறங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெற்றவர்கள் தகுதியுடையவர் ஆவர்.
- இத்திட்டத்தின் கீழ் பயனடைய, தகுதியுள்ள நெசவாளர்கள் தங்களுடைய விண்ணப்பித்தினை தொடர்புடைய சங்க மேலாண்மை இயக்குநரிடம் விண்ணப்பிக்க வேண்டும். சங்க மேலாண்மை இயக்குநர், பெறப்பட்ட விண்ணப்பங்கள் அடங்கிய பட்டியலை சரக துணை / உதவி இயக்குநருக்கு முன்மொழிதல் செய்தல் வேண்டும். பெறப்பட்ட பட்டியலை ஆய்வு செய்து இப்பட்டியலில் உள்ளோரது நிலத்தின் பட்டா உரிமை, நிலத்தின் பரப்பளவு மற்றும் பிற சாராம்சங்களை கள ஆய்வு செய்து பயனாளிகளின் தகுதிகளையும், வீடு கட்டுவதற்கு தேவைப்படும் இடத்தினையும் பின்வரும் குழு உறுதி செய்யும்:–

  (அ) சரக துணை / உதவி இயக்குநர் (கைத்தறி மற்றும் துணிநூல் துறை)

  (ஆ) தொடர்புடைய சங்க மேலாண்மை இயக்குநர்

  (இ) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம பஞ்சாயத்து)

  மேற்கண்ட குழு களஆய்விற்குப்பின் திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளிகளை தேர்வு செய்யும்.

- வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் இடம் பெறாமல் தகுதியான வறுமை நிலையில் உள்ள நெசவாளர்கள், சம்பந்தப்பட்ட நெசவாளர் கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர் மூலம் சரக துணை/உதவி இயக்குநருக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பித்தவர்களில் தகுதி பெறும் நபர்களின்பட்டியலை ஆய்வு செய்து உரிய பரிந்துரையுடன் சரக துணை / உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட வட்டார

வளர்ச்சி அலுவலருக்கு (கிராம பஞ்சாயத்து) அனுப்ப வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை மாவட்ட ஆட்சியரின் இசைவுடன் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

## III. பசுமை வீடுகளின் அமைப்பு (Type Design and Unit Cost)

- பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிலும் 16 அடி நீளம், 11 அடி அகலம் மற்றும் 12 அடி 3 அங்குலம் உயரத்தில் தறி அமைப்புடன் கூடிய வாழும் அறை (Weaving cum living Hall) மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ள பசுமை வீடுகள் கட்டும் திட்ட வழிகாட்டுதலின்படி படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை வசதி மற்றும் மழைநீர் சேகரிப்பு வசதியுடன் மொத்தம் 365 சதுர அடி பரப்பளவில் கட்டப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில் நெசவாளர்களுக்காக கட்டப்படும் பசுமை வீடுகள் திட்டத்தின்படி கட்டப்படும் வீட்டின் அளவுகள் பின்வருமாறு:–

| வ.எண் | அறைகள் | அளவீடுகள் | கட்டப்படும் வீட்டின் அளவுகள் |
|---|---|---|---|
| 1 | தறிக்கூடத்துடன் கூடிய வாழும் அறை | நீளம் | 17’ 6’’ |
| | | அகலம் | 12’ 1½’’ |
| | | உயரம் | 12’ 3’’ |
| | | பரப்பளவு | **213 சதுர அடி** |
| 2 | படுக்கை அறை | நீளம் | 9’ 8’’ |
| | | அகலம் | 9’ 1½’’ |
| | | உயரம் | 10’ 0’’ |
| | | பரப்பளவு | **88 சதுர அடி** |
| 3 | சமையல் அறை | நீளம் | 7’ 0’’ |
| | | அகலம் | 9’ 1½’’ |
| | | உயரம் | 10’ 0’’ |
| | | பரப்பளவு | **64 சதுர அடி** |
| **மொத்த பரப்பளவு** | | | **365 சதுர அடி** |

- இவ்வகையில் 365 சதுர அடி பரப்பளவில் நெசவாளர்களுக்கு கட்டப்படும் ஒவ்வொரு வீட்டிற்குமான திட்டத் தொகை ரூ.2.60 இலட்சம் (கட்டுமானப் பணிக்கு ரூ.2.30 இலட்சம் மற்றும் சூரிய மின் விளக்கு வசதிக்கு ரூ.0.30 இலட்சம்) என கணக்கிடப்பட்டுள்ளது. இத்தொகையான ரூ. 2.60 இலட்சம் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அரசால் முழுமையாக வழங்கப்படும்.

- வீட்டின் வெளித்தோற்றத்தில் மாற்றம் இல்லாமல் சமையலறை அல்லது படுக்கை அறையினை வசதிக்கேற்ப தேவைப்படும் இடத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

- வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்கள் பயனாளிகளால் ஏற்பாடு செய்யப்படவேண்டும். பயனாளிகளால் ஏற்பாடு செய்ய இயலாத பட்சத்தில், கிராம ஊராட்சி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதற்கான செலவினத்தினை திட்ட நிதியிலிருந்து கழித்தல் வேண்டும்.

- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய மின் சக்தியில் இயங்கும் விளக்குகள் அமைக்கப்படும். பயனாளிகள் விரும்பினால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் இணைப்பிற்கான வசதியையும் பெற்றுக் கொள்ளலாம். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் அரசாணை (நிலை) எண்.46, நாள்.17.08.2011 மற்றும் அரசாணை (நிலை) எண். 98, நாள்

31.07.2013 ஆகிய அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டுமானப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

## IV. கட்டுமானப்பணி ஆணை வழங்குதல் (Issue of Work Order)

- தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
- பயனாளிகளின் நிலத்திற்கான பட்டா மற்றும் வீடு கட்டும் இடம் உள்ளிட்ட தகுதிகளை உறுதி செய்த பின்னர், சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) (Block Panchayat) மூலம் பசுமை வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணை வழங்கப்படும். அதன் நகல் சம்பந்தப்பட்ட துணை / உதவி இயக்குநருக்கு அனுப்பப்படும்.
- ஏற்கனவே இருக்கும் சிதிலமடைந்த வீட்டினை இடித்து அப்புறப்படுத்தி பசுமை வீடுகள் திட்ட மாதிரியில் புதிதாக வீடு கட்டப்படும் பட்சத்தில், அதற்கான பணி ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள், ஏற்கனவே உள்ள சிதிலமடைந்த வீட்டினை இடித்து அப்புறப்படுத்திட சம்பந்தப்பட்ட பயனாளி எழுத்துப்பூர்வ ஒப்புதல் வழங்க வேண்டும்.
- கட்டுமானம் மற்றும் தொழில் நுட்பம் முதலியவற்றை பொருத்தவரை ஊராட்சி ஒன்றிய பொறியாளரே பொறுப்பானவர் ஆவார்.
- திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி) ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளின் கட்டுமான முன்னேற்றத்தை அடிக்கடி ஆய்வு செய்து திட்டம் விரைவாக முடிவடைவதை உறுதி செய்தல் வேண்டும். மேலும் அரசின் வழிகாட்டுதலில் இருந்து எந்தவித மாறுதலோ, குறைபாடோ இன்றி வீடுகள் கட்டப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும்.

## V. நிதி ஒதுக்கீடு

- இத்திட்டத்திற்கான நிதி முழுமையாக ஊரக வளர்ச்சித் துறையின் நிதி ஒதுக்கத்தில் நேரடியாக ஒப்பளிப்பு செய்யப்படும். ஒப்பளிப்பு செய்யப்படும் நிதியினை அரசு கணக்கிலிருந்து விடுவித்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குவதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.
- கட்டுமானப் பணிக்கான செலவினம் ஊரக வளர்ச்சி துறையால் மேற்கொள்ளப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் கட்டப்படும் பசுமை வீட்டிற்கான நிதியுதவி நான்கு கட்டங்களாக கிராம ஊராட்சியின் மூலம் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் பயனாளிகளுக்கு ஒப்பளிக்கப்படும்.
- சூரிய மின்சக்தி விளக்கு வசதிக்கான செலவினம் ஊரக வளர்ச்சி துறையால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு (Tamilnadu Energy Development Agency(TEDA)) வழங்கப்படும்.
- ஒவ்வொரு வீட்டிலும் 5 சூரிய மின்சக்தியில் இயங்கும் விளக்குகள் அமைக்கப்படும்.
- வீட்டிற்குள் அமைக்கப்படும் மின் இணைப்பு (Wiring) கட்டுமானப் பணியுடன் சேர்ந்ததாக இருக்கும். சூரிய சக்தி இணைப்புகளுக்கான wiring, ஏனைய உபகரணங்கள், திறன் மாற்றும் விசை இயக்கி (Change over switch) மற்றும் தொடர்புடைய அமைப்புகளை மாற்றம் செய்தல் ஆகியவை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையினால் மேற்கொள்ளப்படும்.

- ► மின்பொருட்கள் விநியோகம் செய்த விலையின் அடிப்படையில் இரண்டு ஆண்டு பொறுப்புறுதியும் (Warranty) ஐந்து ஆண்டுகளுக்கான விரிவான பராமரிப்பு ஒப்பந்தமும், (Comprehensive Annual Maintenance Contract) வழங்கல் வேண்டும். மின்பொருள் விற்பனையாளர்கள் மாவட்ட அளவில் / வட்டார அளவில் பழுதுநீக்கும் நிலையம் அமைக்க வேண்டும். இம்மின்பொருட்களை விநியோகிப்பவர் / உற்பத்தி செய்பவரால் மாவட்ட அளவில் தொலைபேசி உதவி மையம் நிறுவுதல் வேண்டும்.

- ► சூரிய மின்சக்தியுடன் கூடிய மின் விளக்குகள் பொருத்துவதற்கு தேவையான தொகை ரூ.30,000/-ஐ இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறையால் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை கணக்கில் வரவு வைக்கப்படும். சூரிய சக்தியுடன் கூடிய மின் விளக்குகள் பொருத்துவதற்கு மத்திய அரசால் வழங்கப்படும் மானியத்தினை, தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மத்திய அரசிடமிருந்து கோரிப்பெற்று தமிழ் நாடு அரசின் கணக்கில் செலுத்த வேண்டும்.

- ► நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் பசுமைவீடு திட்டத்தின்கீழ் தமிழ்நாடு எரிசக்தி முகமையினால் அமைக்கப்படும் சூரிய மின்சக்தி வசதி அமைப்பிற்கான நிறுவுதல் செலவினத்தின் (Installation Cost) அடிப்படையில் சேவைக் கட்டணமாக 4 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரால் வழங்கப்படும். தமிழ்நாடு எரிசக்தி முகமையினால் அளிக்கப்படும் செலவினம் தொடர்பான கேட்புகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநருக்கு அளித்தல் வேண்டும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் மேற்படி செலவினத்தொகைக்கான நிதியினை ஒப்பளிப்பு செய்தல் வேண்டும்.

## VI. <u>திட்டத்தின் கண்காணிப்பு</u> (Monitoring and Reviewing the Scheme)

1. ஊரக வளர்ச்சித் துறையின் இயக்குநர் நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் மாநில அளவிலான கண்காணிப்பு அலுவலர் ஆவார்.
2. மாவட்ட அளவில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் கண்காணிப்பு அலுவலராக செயல்பட்டு திட்ட செயல்பாட்டினை கண்காணிப்பார்.
3. சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர் (Block Panchayat) வட்டார அளவில் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர் ஆவார்.
4. அனைத்து சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்களும் அந்தந்த மாவட்ட ஆட்சியருடன் ஒருங்கிணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்துவார்கள்.

**VII.** மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (Coordinating Committee) கீழ்க்கண்ட அலுவலர்களை உள்ளடக்கி அமைக்கப்படுகிறது:

1. முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
2. முதன்மைச் செயலாளர், நிதித்துறை
3. முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
4. செயலாளர், எரிசக்தித் துறை
5. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
6. இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் (கூட்டுநர்)
7. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை

**VIII.** கட்டுமானப்பணி துவக்குவதற்கு முன்னர், தேர்வு செய்யப்படும் இடத்தின் / வீட்டின் முன் நின்று பயனாளியின் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும். கட்டுமானம் முழுவதும் நிறைவடைந்தவுடன், வீட்டில் பயனாளியின் பெயர் பொறிக்கப்பட்டு, வீட்டிற்கு முன் பயனாளி நின்று புகைப்படம் எடுத்து, சான்றாவணம் தயாரித்து உரிய அலுவலர்களுக்கு வழங்க வேண்டும்.

ஹர்மந்தர் சிங்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 22.X.2013